# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,365 — 1938 ம் ஞூ சித்திரைமீ 22 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 1,750 (மாத்தளை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1938 ம் ஞூ (எப்பிரல்) சித்திரைமீ 22 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி இக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1938 ம் ஞூ (மார்ச்) பங்குனிமீ 22 ந் தேதியிலன்று மாத்தளைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

கார்ள். ஈ. ஆண்ற்,
உதவி அரசாட்சி ஏசெண்டவர்கள், மாத்தளை.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மாத்தளை உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளொவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணத்தில் மாத்தளை டிஸ்திறிக்கில், மாத்தளை தெற்குப் பிரிவில் மாத்தளை மெடசியாப்பற்றுவில் மறுக்கோனு என்னும் கிராமத்திலுள்ள கீழ்க்கண்ட காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் நொ. A 446.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கலலெனமுலஹேன .. | .. 6 2 37 |

எல்லைகளாவன : வடக்கு-நாகொல்லஎலா ; கிழக்கு-ரீ. பீ. 149,165 ல் மாறுகோனு டபிள்யு. முகாந்திரமாவாலும் இன்னு மொருவராலும் உரித்தாடப்படும் காணியும் ரீ. பீ. 149,166 ல் மறுகோனு எம். பீ. உக்குருலாவாலும் இன்னுமொருவராலும் உரித்தாடப்படும் காணியும் ; தெறகு-பஙகொல்லேஎலா ; மேற்கு-மாறுக்கோனுத் தோட்டத்திலிருந்து பற்றம்பகாத் தோட்டத்துக்குப் போகும் அடிப்பாதை.

II.—பிரதமபடம் நொ. A 446.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 | கலலெனமுலஹேன .. | .. 4 0 34 |

எல்லைகளாவன : வடக்கும் கிழக்கும்-மாறுகொனுத் தோட்டத்திலிருந்து பற்றம்பகாத் தோட்டத்துக்குப் போகும் அடிப்பாதை ; தெற்கு-பங்கொல்லாஎலா ; மேற்கு-கலகா கொம்பனியால் உரித்தாடப்படும் பற்றம்பகாத் தோட்டமும் கலகா கொம்பனியாரால் உரித்தாடப்படும் மாறுகோனுத் தோட்டமும் உரித்தாடும் A 446 ம் இலக்கப் பிரதம படத்திலுள்ள 3 ம் காணித்துண்டு.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கஹாவத்த ஸ்டேசனுக்கருகாமையில் ஊராருக்குள்ள காணியை அரசாட்சியாரின் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 183. குறிச்சி—கஹாவத்த.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 250 | வட்டகொடஹேன .. | .. தோட்டம் | .. ஓ. சீ. பெரேருவும் மறுபேரும் .. | .. 0 0 1·64 |
| 251 | கணத்தேவத்த .. | .. தோட்டம் | .. ஷை .. | .. 0 0 1·15 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஞூ (மே) வைகாசிமீ 24 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1938 ம் ஞூ (எப்பிரல்) சித்திரைமீ 19 ந் உ.

ஆர். எஸ். வீ பொலியர்,
அரசாட்சி ஏசண்டுக்காக, சப்பிரகமுவ மாகாணம்.


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

115——J. N. 74174—144 (4/38)
T 1